ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2451/16 - 2025 අගෝස්තු මස 27 වැනි බදාදා - 2025.08.27
2451/16 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: MUL/LND/02/ACQ/28.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/5/2020/HA/21.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் முலட்டியன பிரதேச செயலாளர் பிரிவில் பெரகம தெற்கு கிராம அலுவலர் பிரிவிற்குச் சொந்தமான பெரகம தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2025.04.03 ஆந் திகதிய மற்றும் கடத்திரல் வரைபட 820432 ஆம் இலக்கத்தில் தொகுதி இல. 2, பத்திர இல. 1 இல் காணித்துண்டு இலக்கங்கள் 01 மற்றும் 02 எனக் காட்டப்பட்டுள்ள முழுக் காணியின் விஸ்தீரணம் 0.0312 ஹெக்டயார் ஆன கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

**1. துண்டு இல. 1**

காணியின் பெயர்: தொளமங்க, கல்கொடஹேன; விபரம்: வீட்டுத்தோட்டம், கலப்புப் பயிர்ச்செய்கை ஒன்று காணப்படுகிறது; உரிமை கோருபவர்: எச். எச். அமரசிறி; விஸ்தீரணம்: 0.0030 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 2**

காணியின் பெயர்: வத்துரவலஹேன மற்றும் கெட்டலகெட்டிய, கல்கொடஹேன; விபரம்: வீட்டுத் தோட்டம், நிலையான ஒரு கட்டிடம், ஒரு கிணறு மற்றும் மலசலகூடம் காணப்படுகிறது; உரிமை கோருபவர்: இந்திரஜித் பாலசூரிய; விஸ்தீரணம்: 0.0282 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025

ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு முலட்டியன பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விந்யா டீ. சமரக்கொடி,
பிரதேச செயலாளர்,
முலட்டியன.

பிரதேச செயலகம்,
முலட்டியன,
2025, ஓகத்து 13.

EOG 08 - 0278